"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/2001) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-9-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7-49 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

68. திருவாளர்கள் பாரத் சன்சார் நிகாம் லிமிடெட், மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு விற்கப்படும் தொலைத் தொடர்புக்கான கேபிள்களுக்கு 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் எந்தவொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் 12 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைப்பது குறித்தும், வணிகவரிகள் துறையின் 1-4-1997, 31-1-2000, 7-4-1998, 15-7-1998, 27-3-1999, 30-5-2000, 5-3-1997 (3 அறிவிக்கைகள்) ஆகிய நாட்களில் தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் ரத்து செய்தது குறித்தும் மற்றும்

வணிகவரிகள் துறையின் 5-3-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1)/வ.வ.அA/22(a-7)/97ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடு செய்தது குறித்தும் வணிகவரிகள் துறையின் 18-8-2001 ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

69. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்துடன் இணைக்கப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்கள், கன சதுர வடிவிலான பாக்கெட்டுகளில் விற்பனை செய்கின்ற பாலின் விற்பனைக்காகச் செலுத்த வேண்டிய விற்பனை வரிக்கு விலக்களிப்பது குறித்தும், 28-5-1999ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிகவரிகள் துறையின் II (1)/வணிகவரிகள்/66(a-3)/99ஆம் எண் மற்றும் 11-1-2001ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிகவரித் துறையின் II (1)/வணிகவரிகள்/1(a)/2001ஆம் எண் ஆகிய எண்களின் அறிவிக்கைகளை ரத்து செய்தது குறித்தும் வணிகவரிகள் துறையின் 28-8-2001 ஆம் நாளிட்ட 72ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

70. கோழித் தீவனத் துணைப் பொருட்கள், செறிவூட்டுப் பொருட்கள், உலர்த்தப்பட்ட பயறு அல்லது வறுக்கப்பட்ட பயறு ஆகியவற்றின் விற்பனை மீது, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் யாதொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியை நான்கு சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 31-8-2001 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

71. 1997-1998 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (இந்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

72. 1999-2000 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

110. "C" படிவத்துடன் அல்லது "C" படிவம் இல்லாமல் திருவாளர்கள் பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் மற்றும் மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் தொலைத் தொடர்புக்கான கேபிள்களைப் பொறுத்தமட்டில் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ், எந்தவொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியை நான்கு விழுக்காடு என்ற சதவீதத்தில் குறைத்துக் கணக்கிடப்பட வேண்டும் என்று கட்டளையிடுவது குறித்து வணிகவரிகள் துறையின் 18-8-2001 ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

111. மானியக் கோரிக்கை எண் 11 - மாவட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

112. மானியக் கோரிக்கை எண் 8 - பொதுத் தேர்தல்கள் குறித்த வரைவு உரை மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

113. மானியக் கோரிக்கை எண் 8 - உள்ளாட்சித் தேர்தல்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

114. மானியக் கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

115. மானியக் கோரிக்கை எண் 42 - பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

116. மானியக் கோரிக்கை எண் 60 - பல்வகை மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

117. மானியக் கோரிக்கை எண் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)